தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 23-3-2018

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## பச்சைப் பயறு விலையில் ஈர்ப்பு இருக்காது

இந்தியாவில் மொத்த பயறு உற்பத்தியில், பச்சைப் பயறு சுமார் 8 சதவீதம் பங்களிக்கின்றது. இராஜஸ்தான், ஆந்திரபிரதேசம், மத்தியபிரதேசம், தமிழ்நாடு மற்றும் ஒடிசா ஆகியவை பச்சைப் பயறு உற்பத்தி செய்யும் முக்கிய மாநிலங்களாகும். இம்மாநிலங்கள் சேர்ந்து நாட்டின் மொத்த பச்சைப் பயறு உற்பத்தியில் 66 சதவீதம் பங்களிக்கின்றன. வேளாண் அமைச்சகத்தின் இரண்டாவது முன்கூட்டிய மதிப்பீட்டின் படி, 2017-2018 ம் ஆண்டின் இலக்கை விட குறைந்த அளவு பச்சைப் பயறு உற்பத்தி உள்ளது. (2.3 மில்லியன் டன்களுக்கு எதிராக 1.74 மில்லியன் டன்கள்)

இந்தியாவில் 2016-2017 ம் ஆண்டில் பயறு வகைகளை உற்பத்தி செய்ய விவசாயிகளை ஊக்குவித்தலை பொருட்டு அரசு குறைந்த பட்சஆதரவு விலையை உயர்த்தி நடைமுறைப் படுத்தியது. இதன் அடிப்படையில் பருப்பு உற்பத்தி 16.35 மில்லியன் டன்களிலிருந்து (2015-16) 2016-2017 ல் 22.95 மில்லியன் டன் அளவிற்கு பதிவு செய்துள்ளது. எனவே, அதிகளவு இருப்பு மற்றும் புதிய ரபி பருவ பச்சைப் பயறு வரத்து, குறைந்தபட்ச ஆதரவு விலையை விட பண்ணை விலையில் குறைவாக காரணமானது. ஒடிசாவில் இருந்து வரும் வரத்து அதிகரித்தாலும், ஆந்திரபிரதேசம் மற்றும் தமிழ்நாட்டின் இயல்பான பயிர் பரப்பும், பச்சைப் பயறு விலையை பலவீனப்படுத்துகிறது.

தமிழ்நாட்டில் ஒவ்வொரு வருடமும் சுமார் 2.38 இலட்சம்எக்டர் பரப்பளவில் பச்சைப் பயறு பயிரிடப்பட்டு 1.25 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. கோ 6, கோ 7, கோ 8 மற்றும் வம்பன் 3 ஆகியபச்சைப் பயறு இரகங்கள் அதிகளவில் பயிரிடப்பட்டு வருகின்றன. திருவாரூர்,

நாகப்பட்டினம், தூத்துக்குடி, கடலூர், திருவள்ளூர், சேலம் மற்றும் தஞ்சாவூர் ஆகியவை தமிழகத்தில் பச்சைப் பயறு உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்களாகும்.

இச்சூழலில், விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின், வேளாண் மற்றும் ஊரகமேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் - விலை முன்னறிவிப்புத் திட்டம், கடந்த 16 ஆண்டுகளாக விழுப்புரம் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நிலவிய பச்சைப் பயறு விலையை மற்றும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வுகளின் அடிப்படையில், அறுவடையின் போது (ஏப்ரல்–மே 2018) தரமான பச்சைப் பயறு சராசரி பண்ணை விலை கிலோவிற்கு ரூ. 48வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. தற்போது அரசு விவசாயிகளிடமிருந்து நேரடி கொள்முதல் செய்தால் மட்டுமே பச்சைப் பயறு பண்ணை விலையில் மாற்றங்கள் இருக்கும். எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில், விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

*உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,*
*வேளாண் மற்றும் ஊரகமேம்பாட்டு ஆய்வு மையம்,*
*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,*
*கோயம்புத்தூர் - 641 003.*
*தொலைபேசி -0422-2431405*

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

*பேராசிரியர் மற்றும் தலைவர்,*
*பயறு வகைத்துறை,*
*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,*
*கோயம்புத்தூர் - 641 003.*
*தொலைபேசி - 0422 -2450498*

மக்கள் தொடர்பு அலுவலர்